செ.வெ.எண்:11/ஜூன் நாள்:07.06.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## தேசிய நெடுஞ்சாலைத்துறையின் மூலம் பாம்பன் கிராமத்திலிருந்து தனுஷ்கோடிக்கு புதிய தேசிய நெடுஞ்சாலை அமைப்பதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்களை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரத்தில் இன்று (07.06.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தேசிய நெடுஞ்சாலைத்துறையின் மூலம் பாம்பன் கிராமத்திலிருந்து தனுஷ்கோடிக்கு புதிய தேசிய நெடுஞ்சாலை அமைப்பதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்களை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்திலுள்ள அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோவில் மிகவும் சிறப்பு வாய்ந்த பழைமையான கோவிலாகும். இங்கு ஆண்டு தோறும் தமிழகம் மட்டுமல்லாது பிற மாநிலங்களில் இருந்தும், பிற நாடுகளில் இருந்தும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் அதிகமாக வருகை தருகின்றனர். அதனடிப்படையில் சுற்றுலாப்பயணிகள் சிரமமின்றி தனுஷ்கோடிக்கு செல்வதற்கு ஏதுவாகவும் மற்றும் மீனவர்கள் மீன்களை பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் கொண்டு செல்வதற்கு வசதியாகவும் பாம்பன் கிராமத்திலிருந்து தனுஷ்கோடிக்கு புதியதாக தேசிய நெடுஞ்சாலை அமைப்பதற்கு தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்களான குந்துகால் முதல் நடராஜபுரம் சாலை, மெய்யம்புளி முதல் ராமேஸ்வரம் சாலை, கீழக்காடு முதல் இராமேஸ்வரம் சாலை, எம்.கே.நகர் முதல் இராமேஸ்வரம் சாலை உள்ளிட்ட இடங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன்பின்பு இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் மருந்துகளின் தரம் குறித்து பொதுமக்களிடம் கேட்டறிந்து ஆய்வு செய்தார். மேலும் மருத்துவர்களின் இருப்பு குறித்தும், நோயாளிகளிடத்தில் மருத்துவர்களின் அணுகுமுறைகள் குறித்தும், சிகிச்சைக்காக வருகை தந்த பொதுமக்களிடம் கேட்டறிந்தார். சிகிச்சைக்காக வருகை தரும் பொதுமக்களிடம் பரிவுடன் நடந்து கொள்ள வேண்டும் என மருத்துவர்களுக்கு அறிவுரை மற்றும் ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த ஆய்வின் போது இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.ராம்பிரதீபன், தேசிய நெடுஞ்சாலை உதவி கோட்டப் பொறியாளர் திரு.சங்கர், வனத்துறை அதிகாரி திரு.ஞானப்பழம், இராமேஸ்வரம் நகராட்சி ஆணையர் திரு.ஜெயராம ராஜா, வட்டாட்சியர் திருமதி.ரத்தினவள்ளி, வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர்.அங்காரெட்டி உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**